தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# உணவு பதப்படுத்தும் தொழிலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்

புதுடெல்லி, மார்ச் 30

**உணவு பதப்படுத்தும் தொழிலில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் தேசிய உணவு பதப்படுத்தும் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு பத்து சதவீதமும் பங்களிப்பு உள்ளதாகக் கூறப்படும் தகவல் உண்மையா?**

இத்தகவல் உண்மை எனில் அதைப் பற்றிய விவரங்களையும் தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களை மேம்படுத்த ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கோரினார்.

**இது தொடர்பாக கடந்த 28 ஆம் தேதி அவர் விடுத்த கோரிக்கை விவரம் வருமாறு:**

மாம்பழம், வாழைப்பழம், மஞ்சள், புளி, தேங்காய் வேர்க்கடலை, முந்திரி, பப்பாளி, மைதா, பீன்ஸ், திராட்சை, கிழங்கு வகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. எனவே தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்துவதற்கான பிரத்தியேக திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா? அவ்வாறு மேற்கொண்டு இருந்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய 6 உணவுப் பூங்காக்கள் மற்றும் 15 சிறு உணவு வேளாண் பதப்படுத்தும் தொழில் அமைப்புகள் ஆகியவற்றை அமைப்பதற்காக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்துள்ளதா? அத்தகைய தொழில் நிறுவனங்களுக்கு மூலதனச் செலவினங்களுக்கு மானியம் மற்றும் இதர ஊக்கத் தொகைகள் பெற தகுதிகள் உள்ளதா அவ்வாறெனில் அதைப் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் விடுத்த கோரிக்கைக்கு ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் துறை இணை அமைச்சர் பிரஹலாத சிங் பட்டேல் அளித்த பதில் விவரம் வருமாறு:**

2019- 20ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தொழில்துறை வருடாந்திர ஆய்வறிக்கையின் படி தமிழ்நாட்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்டுள்ள உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 4995. இந்த ஆய்வின்படி அகில இந்திய அளவில் தமிழகம் உணவு பதப்படுத்தப்படும் தொழில் நிறுவனங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. மொத்து உற்பத்தியின் அளவு ரூ. 99656.33 கோடியாகும். அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி அளவில் இது 7.5 சதவீதம் ஆகும்.

தமிழ்நாடு உள்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உற்பத்தியாகும் மாம்பழம், வாழைப்பழம், மஞ்சள், புளி, தேங்காய், வேர்க்கடலை, முந்திரி, பப்பாளி, பீன்ஸ், திராட்சை உள்ளிட்ட உணவுப் பொருட்களை பதப்படுத்துவதற்கான தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காகவும் அத்தொழிலை வளர்ச்சி அடைய செய்யவும் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் துறை அமைச்சகம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிரதமர் கிஷான் சம்பாத யோஜனா சிறு உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் திட்டம் மற்றும் உற்பத்தி திறன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டம் இவற்றில் அடங்கும்.

உணவு பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் உணவுப் பொருள்கள் பாதுகாக்கும் தொழில் நிறுவனங்களை தொழில் முனைவோர்கள் அமைப்பதற்காக பிரதமர் கிஷான் சம்பாத யோஜனா மற்றும் நிதி உதவி கடன் உதவித் திட்டம் மூலதன மானியத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஒன்றிய அரசு ஆதரவு அளித்து வருகிறது. சிறு அளவிலான உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி, தொழில்நுட்ப உதவி, வர்த்தக ஆதரவு ஆகியவற்றையும் அழித்து வருகிறது. சிறு உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ.22.31 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. பிரதமர் சிறு உணவு பதப்படுத்தும் தொழில் திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டம் ஒரு உணவுப் பொருள் ஊக்குவிப்பு என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் கிசான் சம்பாத யோஜனா திட்டத்தின் கீழ் ஒரு மெகா உணவுப் பூங்கா மற்றும் 11 வேளாண் பதப்படுத்தும் மற்றும் சிறு உணவுப் பூங்காக்கள் அமைக்க நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி பொதுவான பகுதிகளில் தகுதி வாய்ந்த உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 35 சதவீத மானியமும் தலித் மற்றும் மலைவாழ் தொழில் முனைவோர்கள் ஆகியோருக்கு 50 சதவீத மானியமும் தகுதி வாய்ந்த சுய உதவி குழுக்களுக்கு அதிகபட்சமாக ரூ. 5 கோடியும் வழங்கப்படும்.

*****